வடாற்காடு மாவட்டத்தில் கைமுறை காகிதத் தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம்.

368—(*வினா எண். 21516)—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடாற்காடு மாவட்டத்தில் கைமுறை காகிதத் தொழிற்சாலை துவங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: வடாற்காடு மாவட்டத்தில் வந்தவாசி, பள்ளிகொண்டா, காணலம், அனக்காவூர் மற்றும் நெமிலி ஆகிய இடங்களில் கைமுறை காகித அலகுகள் துவங்கி, அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதன் தொடர்பாக மேற்கொண்டு தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. த. வேணுகோபால்: தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் 5 இடங்களில் கைமுறை காகித அலகுகள் அமைக்க ஆணை பிறப்பித்துள்ளதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்த தொழிற்சாலைகள் எப்போது தொடங்கப்படும்? அந்தத் தொழிற்சாலைகளில் ஆண்கள் பணி புரிவார்களா அல்லது பெண்கள் பணிபுரிவார்களா? எத்தனை பேர் பணி புரிவார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: தலைவர் அவர்களே, வந்தவாசி, பள்ளிகொண்டா, காணலம் ஆகிய இடங்களில் கைமுறை காகித அலகுகள் அமைக்க கட்டிடம் கட்ட வரைபடம் தயாரித்தல், மதிப்பீடு தயாரித்தல், நில ஆர்ஜிதம் செய்தல் போன்ற தொடர் நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்பட்டு வருகின்றன என்ற விவரம் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மீதியுள்ள விவரங்களுக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் பதில் கிடைக்கும்.

திரு. த. வேணுகோபால்: தலைவரவர்களே, நான் முதலிலே கேட்டேன், அங்கே பணிபுரிகின்றவர்கள் ஆண்களாக இருப்பார்களா அல்லது பெண்களாக இருப்பார்களா என்று. அதற்குப் பதில் இல்லை. அதோடு இந்த கைமுறை காகிதத் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகின்ற காகிதம் தடங்கல் இல்லாமல் உடனுக்குடன் விற்பனைச் செய்யப்படுவதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே பணிபுரிபவர்கள் ஆண்களாக இருப்பார்களா அல்லது பெண்களாக இருப்பார்களா என்று கேட்ட கேள்விக்கு நான் இப்போது பதில்

சொல்ல இயலாது. வந்தவாசி, பள்ளிகொண்டா, காணலம் அனுக்காவூர் ஆகிய இடங்களில் கைமுறை காகித அலகுகள் ஏற்படுத்துவதற்காக கட்டிடம் கட்ட வரைபடம் தயாரித்தல், மதிப்பீடு தயாரித்தல், நில ஆர்ஜிதம் செய்தல் போன்றவை களுக்கான தொடர் நடவடிக்கைகளை கதர் கிராமத்தொழில் வாரியம் எடுத்து வருகிறது. நெமிலி கைமுறை காகித ஆலையை ஏற்படுத்த கட்டிடம் கட்ட பூர்வாங்க வேலை நடந்து கொண் டிருக்கிறது. இந்த கைமுறை காகித அலகுகளில் பெண்கள் பணிபுரிவார்களா, ஆண்கள் பணிபுரிவார்களா என்பதை உற் பத்தியைத் தொடங்கும் சமயத்தில்தான் அரசு நிர்ணயம் செய் யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. எம். சேதுராமன்: தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் அரப்பாக்கத்தில் இயங்கும் கைமுறை காகித அலகில் பணியாளர்கள் நிரந்தரமாக்கப்படாமல் பல ஆண்டு களாக இருக்கிறார்கள். அந்த நிலைமையை மாண்புமிகு அமைச்சரவர்கள் விரைவிலே தீர்த்து வைப்பார்களா? இப்படிப் பட்ட கைமுறை காகித அலகுகளில் தயாரிக்கப்படும் காகிதத்தை தேக்கம் இல்லாமல் விற்பனை செய்வதற்கும், அங்கே பணி யாற்றும் ஊழியர்களை ஊக்குவிக்கும்பொருட்டு அவர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுக்கவும் ஏற்பாடு செய்யப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: தலைவ ரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வடாற்காடு மாவட்டத்தில் அரப்பாக்கம் என்ற இடத்தில் கைமுறை காகித அலகு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்று கூறினார்கள். தற்போது வடாற்காடு மாவட்டத்தில் மட்டும் அல்ல, தமிழ் நாட்டில் பத்து இடங்களில் இந்த கைமுறை காகித அலகுகள் செயல்படுகின்றன. அவற்றில் ஒன்றுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் குறிப்பிடப்பட்டது. ஒவ்வொரு அலகிலும் 50 முதல் 60 பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்துக்கொண்டு வரு கிறோம். நான் ஒவ்வொரு இடத்திற்கும் செல்லும்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று, பணிபுரிபவர்கள் பல கோரிக்கைகளை எடுத்து வைக்கிறார்கள். தங்களுக்குக் கிடைக்கின்ற வருவாய், அதாவது கூலி குறைவாக இருக்கிறது, அதை உயர்த்த வேண்டுமென்று அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய இப்படிப்பட்ட கோரிக்கை களை எல்லாம் அரசு பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி யிடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]